**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS NO.57/2022**

| | |
|---|---|
| Name:. குமாரி | Caste: |
| Father's Name:<br>Husband Name :. **வரதராஜன்** | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day | |

## 12.11.2024

## வா.சா.1 - மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் விசாரணை

1) 10.08.1976 ம் வருடம் 1ம் பிரதிவாதியின் தாயார் கலா என்பவர் இறந்து விட்டார். அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அந்த இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேற்கண்ட ஆவணத்தை குறியீடு செய்யும் போது கலா என்பவர் மேற்குறிப்பிட்ட தேதியில் இறக்கவில்லை என்று கூறி 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆவணத்தை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை செய்தார்.)

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவரின் முதல் மனைவி கலா என்பவர் இறந்து விட்டார் என்பதை நிரூபிப்பதற்காக வா.சா.ஆ.9 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். கலா எந்த வருடம் இறந்தார் என்றால் 1976ல் இறந்து விட்டார். எனக்கு 1977 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனக்கு ஒரே மகள் தான் உள்ளார். இந்த வழக்கில் நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)